




சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் வடக்குப் பகுதிக்குட்பட்ட 77, 77அ, 78, 78அ, 99, 99அ ஆகிய ஏழு வட்டங்களின் தேர்தல் பணிமனைகளையும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் சொ.வேலு, கழக வேட்பாளர் தமிழன்பிரசன்னா, கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், கோ.மணி, ஜி.தாமோதரன், பி.எம்.யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, எழும்பூர் வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர்,மற்றும் கழக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# சென்னை கிழக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள் / செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்ட தலைவர்கள்/ செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (31/03/26 செவ்வாய் கிழமை) காலை 10 மணி அளவில் சென்னை பெரவள்ளூர், எண்.273, 114. பேப்பர் மில் சாலை, (சூரத் கஜானா துணிக்கடை எதிரில்) கொளத்தூர் கிழக்கு பகுதி தேர்தல் பணிமனையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்தில் உள்ள கொளத்தூர், துறைமுகம், எழும்பூர், திரு.வி.க.நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய 6 தொகுதிகளுக்குட்பட்ட காங்கிரஸ், சி.பி.எம், சிபிஐ, மதிமுக, தேமுதிக, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மக்கள் நீதி மையம், மனிதநேய மக்கள் கட்சி, திராவிடர் கழகம், எஸ்.டி.பி.ஐ, மனிதநேய ஜனநாயக கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, திராவிட இயக்க தமிழர் பேரவை, முக்குலத்தோர் புலிப்படை, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி, இந்தியக் குடியரசு கட்சி, சமத்துவ மக்கள் கழகம், இந்திய சமூகநீதி இயக்கம், உள்ளிட்ட கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: இக்கூட்டத்தில் கழக வேட்பாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், தி.மு.க. பகுதி செயலாளர்கள் தவறாமல் பங்கேற்க வேண்டும்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

# தொடர் சரிவில் இந்திய ரூபாய் - ஒன்றிய அரசின் அலட்சியத்தால் சாமானிய மக்கள் பாதிப்பு!

## ஈரோடு கே.இ. பிரகாஷ் எம்.பி. குற்றச்சாட்டு!



*புதுடெல்லி, மார்ச்.31-*

*நாடாளுமன்றத்தில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் எழுப்பிய கேள்விக்கு, ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர் அளித்துள்ள பதில்கள் அதிர்ச்சியளிப்பதாகவும், நாட்டின் பொருளாதாரச் சூழலை ஒன்றிய அரசு மூடி மறைக்க முயற்சிப்பதையும் காட்டுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.*

*இது குறித்து கே.இ. பிரகாஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட் டுள்ளதாவது:*

***1. வரலாறு காணாத வீழ்ச்சியில் ரூபாய் மதிப்பு:***

*அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 93.88 என்ற மிக மோசமான நிலையை எட்டியுள்ளது. கடந்த ஓராண்டில் மட்டும் ரூபாய் மதிப்பு 9% சரிந்துள்ளதை ஒன்றிய அரசே ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால், இந்த வீழ்ச்சியால் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து, பணவீக்கம் அதிகரித்து சாமானிய மக்கள் பாதிக்கப்படுவதை ஒன்றிய அரசு கண்டு கொள்ளவில்லை.*

***2. கச்சா எண்ணெய் விலையேற்றமும் சுமை அதிகரிப்பும்:***

*ரூபாய் மதிப்பு வீழ்ச்சியடைந்து வரும் சூழலில், உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தால் அது இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலையை வரலாறு காணாத அளவிற்கு உயர்த்தும். இது போக்குவரத்துச் செலவை அதிகரித்து, ஏழைமற்றும் நடுத்தர மக்களின் அன்றாட உணவுப் பொருட்களின் விலையை விண்ணைத் தொடச் செய்யும். இதற்குப் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க ஒன்றிய அரசு தவறிவிட்டது.*

***3. வெற்று அறிக்கைகளால் தீர்வு கிடைக்காது:***

*நிதியமைச்சகத்தின் பதில் வெறும் புள்ளிவிவரக் கணக்காக மட்டுமே உள்ளது. பிப்ரவரி 2026ல் கொண்டுவரப்பட்ட புதிய விதிமுறைகளும், அண்டை நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் ரூபாய் வர்த்தகமும் இன்னும் முழுமையான பலனைத் தரவில்லை. ரூபாய் மதிப்பை நிலைநிறுத்த ரிசர்வ் வங்கி தலையிடுவதாகக் கூறினாலும், கள யதார்த்தத்தில் இந்திய நாணயம் அதன் வலிமையை இழந்து கொண்டே வருகிறது.*

*எனவே, இந்திய ரூபாயின் மதிப்பை நிலைநிறுத்த வும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும் ஒன்றிய அரசு உடனடி மற்றும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சாமானிய மக்களின் வாழ்வாதாரத்தை வெறும் "பொருளாதாரக் கணக்கீடாக" மட்டும் பார்க்காமல், அவர்களின் வாங்கும் சக்தியைப் பாதுகாக்கும் வகையில் கொள்கைகளை வகுக்க வேண்டும் எனத் கே.இ. பிரகாஷ் வலியுறுத்தியுள்ளார்.*

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் அடங்கிய 4 சட்டமன்றத் தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள்;

**உத்திரமேரூர் – க.சுந்தர் – தி.மு.க.**
**காஞ்சிபுரம் – திருமதி நித்யா சுகுமார் – தி.மு.க.**
**மதுராந்தகம்(தனி) – திருமதி அமலு பொன்மலர் – தி.மு.க.**
**செய்யூர் (தனி) – சிந்தனைச் செல்வன் – வி.சி.க.**

ஆகியோரை அறிமுகப்படுத்தி கீழ்க்கண்டவாறு கூட்டங்கள் நடைபெற உள்ளது:

| நாள் | நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 1.4.2026 | காலை 10 மணி | மதுராந்தகம் (தனி) | ஜெ.எம்.ஜெ, திருமண மண்டபம், சிலாவட்டம் |
| 2.4.2026 | காலை 10 மணி | காஞ்சிபுரம் | ஏ.கே.ஜி.திருமண மண்டபம், காஞ்சிபுரம் |
| 3.4.2026 | காலை 10 மணி | உத்திரமேரூர் | பிரியா மஹால், உத்திரமேரூர் |
| 5.4.2026 | காலை 10 மணி | செய்யூர் (தனி) | எல்லப்பன் திடல் செய்யூர் |

எனவே சம்பந்தப்பட்ட மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பெயரை முறையாக அழைப்பிதழில் அச்சிட்டு அவர்களுக்கு வழங்கி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பிர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், மாவட்டக் கழகப் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வார்டு கிளைக்கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

## அமெரிக்காவில் பணிபுரியும்

# இந்தியர்களின் 'எச்1பி' விசா பிரச்சினை தீர்க்கப்படுமா?

## மக்களவையில் – டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!



*புதுடெல்லி, மார்ச். 31-*

*அமெரிக்கா இந்தியக் குடிமக்கள் அமெரிக்காவில் பணிபுரியத் தேவையான எச்1பி விசா வழங்குவது தொடர்பான கடுமையான நடைமுறை சிரமங்கள் தீர்க்க இந்திய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.*

*அவரது கேள்விகள் வருமாறு:-*

*இந்தியக் குடிமக்கள் அமெரிக்காவில் பணிபுரியத் தேவையான எச்1பி விசா வழங்குவதற்கு அமெரிக்கா எடுத்த கடுமையான நடவடிக்கைகளால் ஏராளமான இந்திய ஆர்வலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஒன்றிய அரசு தீவிரமாக தனது கவனத்தில் எடுத்ததா? அப்படியானால், அதன் விவரங்கள் தெரிவிக்க?*

*எச்1பி விசா பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நிரந்தரமான, இணக்கமான தீர்வைக் காண வலுவான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சியை எடுக்க இந்திய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?*

*அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இந்திய மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் முன்னெப்போதும் இல்லாத இன்னல்கள் குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?*

*இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்தார்.*

*அதற்கு இந்திய அரசின் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் வருமாறு:*

*இந்திய குடிமக்கள் எதிர்கொள்ளும் H1B விசா தொடர்பான சவால்களை இந்திய ஒன்றிய அரசாங்கம் அறிந்திருக்கிறது. விசா தொடர்பான கொள்கைகள் மற்றும் தொடர்புடைய முடிவுகள் இறையாண்மை சார்ந்த விஷயங்கள். ஒவ்வொரு விசா நடவடிக்கை முடிவும் ஒரு தேசிய பாதுகாப்பு முடிவு என்றும், அமெரிக்க விசா என்பது ஒரு சிறப்புரிமை அன்றி உரிமை அல்ல என்பதும் அமெரிக்க அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.*

*டிசம்பர் 2025 இல், அமெரிக்க வெளியுறவுத்துறை அனைத்து H1B விண்ணப்பதாரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் (H4) அமெரிக்காவில் அனுமதிக்கப்படுவதைத் தீர்மானிக்க ஆன்லைன் இருப்பை சரிபார்ப்பதாக அறிவித்தது. அதைத் தொடர்ந்து, 2025 டிசம்பரில் திட்டமிடப்பட்டிருந்த பல H1B மற்றும் H4 விசா விண்ணப்பதாரர்களின் தூதரக சந்திப்புகள் 2026 இல் புதிய தேதிகளுக்கு மாற்றியமைக்கப்பட்டது, இதனால் அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் இந்தியாவில் தங்கியுள்ளனர்.*

*தொழில்நுட்ப முன்னேற்றம், புதுமை, பொருளாதாரம் ஆகியவற்றை ஊக்குவிப்பதில் திறமையான இயக்கம் நீண்ட காலமாக குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது என்று இந்தியா நம்புகிறது.*

*இந்தியா மற்றும் அமெரிக்கா இரண்டிலும் வளர்ச்சி, மற்றும் செல்வ உருவாக்கம். இரு நாடுகளிலும் உள்ள பங்குதாரர்கள் சட்டப்பூர்வ நகர்வுக்கான தொடர்ச்சியான ஆதரவை எளிதாக்குவதில் ஈடுபட்டுள்ளனர்.*

*வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு இந்திய ஒன்றிய அரசு அதிக முன்னுரிமை அளிக்கிறது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பல்வேறு நாடுகளில் உள்ள இந்திய மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட அரசாங்கங்களுடன் தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.*

*இந்தியப் பிரஜைகள் நேரில் வருகைகள், மின்னஞ்சல், 24x7 அவசரகால ஹெல்ப்லைன்கள், WhatsApp, MADAD, CPGRAMS மற்றும் eMigrate போன்ற குறைகளைத் தீர்க்கும் போர்டல்கள் மற்றும் சமூக ஊடக தளங்கள் மூலம் இந்திய தூதரகங்கள் மற்றும் இடுகைகளை அணுகலாம். இந்திய சமூக நல நிதியம் (ICWF) மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் உட்பட துன்பத்தில் உள்ள இந்திய குடிமக்களுக்கு உதவி வழங்கவும் பயன்படுத்தப்படுகிறது, மேலும் தேவையான இடங்களில் சட்ட உதவிகளை வழங்குவதும் அடங்கும்.*

*இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.*

## திராவிட மாடல் அரசின் 2.0 ஜாக்பாட் அறிக்கை!

# இல்லத்தரசிகளுக்கு ரூ.8000 கூப்பன்! மகளிரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச் 31 –

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட தேர்தல் அறிக்கை 2.0 ஜாக்பாட் அறிக்கையாக உள்ளது என்றும் இல்லத்தரசிகளுக்கு ரூ.8000 கூப்பன் என்ற அறிவிப்பு மகளிரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்றும் "தினகரன் நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.


தினகரன்
மார்ச் 30, 2026 திங்கட்கிழமை
**திமுகவின் 2.0 ஜாக்பாட்**
தமிழக மக்கள் ஆவலோடு எதிர்பார்த்த திமுகவின் தேர்தல் அறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார். எதிர்பார்த்தது போலவே அடுத்த 5 ஆண்டுகளுக்கான பொதுமக்களுக்கான ஜாக்பாட்டை உள்ளடக்கிய தாக திமுக தேர்தல் அறிக்கை காணப்பட்டது. கூடுதலாக 15 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் 8ம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்பட உள்ளது. மகளிர் உரிமைத்தொகை ரூ.2000மாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது. இலவச மின்சாரம் பெறும் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு எவ்வித மீட்டரும் பொருத்தப்படாத நவீன மின்சாரப் பம்பு செட்டுகள் வழங்கப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 10 லட்சம் புதிய வீடுகள் கட்டித் தரப்படும் என முத்தான திட்டங்கள் திமுக தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

அது வருமாறு:

தமிழக மக்கள் ஆவலோடு எதிர்பார்த்த தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டார். எதிர்பார்த்தது போலவே அடுத்த 5 ஆண்டுகளுக்கான பொதுமக்களுக்கானஜாக்பாட்டைஉள்ளடக்கியதாக தி.மு.க. தேர்தல் அறிக்கை காணப்பட்டது. கூடுதலாக 15 லட்சம் மாணவர்கள்பயன்பெறும்வகையில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் 8ம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்பட உள்ளது. மகளிர் உரிமைத்தொகை ரூ.2000மாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது. இலவச மின்சாரம் பெறும் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு எவ்வித மீட்டரும் பொருத்தப்படாத நவீன மின்சாரப் பம்பு செட்டுகள் வழங்கப்படும். அடுத்த5ஆண்டுகளில்தமிழ்நாட்டில் 10 லட்சம் புதிய வீடுகள் கட்டித் தரப்படும் என முத்தான திட்டங்கள் திமுக தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

உயர் கல்விச் சேர்க்கையை அதிகரிக்க, புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்படி மாதம்தோறும் வழங்கப்பட்டு வரும் ஆயிரம் ரூபாய், இனி 1500 ஆக உயர்த்திவழங்கப்படஉள்ளது. நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 3,500ஆக உயர்த்தி வழங்கப்பட உள்ளது. பால் கொள்முதல்விலைலிட்டர்ஒன்றுக்கு ரூ.5 உயர்த்தப்படும். முதியோர் உதவித்தொகை ரூ.1,200 லிருந்து ரூ.2000ஆகஉயர்த்தப்படஉள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை ரூ.1500ல் இருந்து ரூ.2,500ஆகஉயர்த்தப்படஉள்ளது. தமிழக முதல்வர் அறிவித்துள்ள திட்டங்கள் அனைத்தும் மாணவ, மாணவிகளுக்கும், விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும் தித்திப்பை ஏற்படுத்த கூடியதாகும்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்காக அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படும். அரசு அமைப்புகளில் ஏற்படும் 1.5 லட்சம் காலிப் பணியிடங்கள் காலதாமதமின்றி நிரப்பப்படும் என தேர்தல் அறிவிப்புகள் அரசு ஊழியர்களை குளிர்விக்க தயங்கவில்லை. இளைஞர்களை கவரும் வகையில் புதிதாக 2 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில், 2030ம் ஆண்டிற்குள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நியோ டைடல் பூங்காக்கள், நகரங்களில் தேவைப்படும் இடங்களில் முழு அளவிலான தொழில்நுட்ப பூங்காக்கள் ஏற்படுத்தப்படும் என தேர்தல் அறிக்கை தெரிவிக்கிறது.

திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மாநகராட்சிகளின் அருகில் நவீனஉலகத்தரவசதிகளுடன்புதிய நகரங்கள் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு நகரில் பெருகி வரும் நெருக்கடிகளை குறைக்க உதவும். கடலூர், தஞ்சாவூர், மதுரை, தூத்துக்குடி, நெல்லை, ராமநாதபுரம், சேலம், திருப்பூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கோவை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புற்று நோய்க்கான நவீன சிகிச்சை வசதிகள், தமிழ்நாட்டில் 10 கைத்தறி பூங்காக்கள் என அனைத்து பகுதி மக்களையும் இந்த தேர்தல் அறிக்கையானது கவர்வதாக உள்ளது.

இவை எல்லாவற்றையும் விட இல்லத்தரசிகள்தங்களதுவீட்டுக்குத் தேவையானவாஷிங்மிஷின், டி.வி., கிரைண்டர், பிரிட்ஜ், மிக்சி, மைக்ரோவேவ் மற்றும் மின் அடுப்புகள்போன்றவீட்டுஉபயோகப் பொருட்களைப் புதிதாக வாங்கவோ அல்லது ஏற்கனவே பயன்படுத்தி வரும் இத்தகைய பொருட்களுக்கு மாற்றாக வாங்கவோ 'இல்லத்தரசி' என்ற புதிய திட்டம் செயல்படுத்தப் படுத்திட ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 8 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான கூப்பன் வழங்கப்படும் என்கிற அறிவிப்பு மகளிரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தி.மு.க. தேர்தல் அறிக்கையானது தேர்தல்களத்தில் பேசுபொருளாக மாறும் என்பதில் சந்தேகமே இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியின் வெற்றி வேட்பாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 114அ வட்டத்தில் பகுதி செயலாளர் – மண்டல குழு தலைவர் மாமன்ற உறுப்பினர் எஸ்.மதன்மோகன் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் வட்டக் கழக செயலாளர் தமீம் அன்சாரி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.